LIBRARY
30 NOV 2010
Eastern University, Sri Lanka.

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

**EDU 301 வகுப்பறைக் கற்பித்தலில் திட்டமிடலும் முகாமைத்துவமும்**
**Planning and Management of Classroom Teaching**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ) இடைநிலைப்பாடசாலை வகுப்பறைகளில் வினைத்திறனான அறிவுறுத்தலுக்கான பாடத்திட்டமொன்றை (Syllabus) அமுல் நடத்துவதன் முக்கியத்துவங்களை ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) ஆசிரியர் வேலைத்திட்டமொன்றை (Scheme of Work) தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய அம்சங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

02.(அ) வகுப்பறைக் கற்பித்தலில் முன்னேற்பாடான நடைமுறையான பாடக்குறிப்பு (Notes of Lesson) ஒன்றைத் தயாரிக்குகையில் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை அம்சங்களைக் குறிப்பிட்டு, அதிலுள்ள

(i) விஷேட குறிக்கோள் (Specific Objective)
(ii) மீளவலியுறுத்தல் (Remedial action)
(iii) மதிப்பீடு (Evaluation)

ஆகியவற்றின் முக்கியத்துவங்களை எடுத்துரைக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) வகுப்பறைச் செயற்பாட்டில் விஷேட குறிக்கோள் (Specific Objective) ஒன்றை ஏற்படுத்துவதினால் ஆசிரியருக்கு கிடைக்கக் கூடிய அனுகூலங்களை முன்வைக்க.

(08 புள்ளிகள்)

03.(அ) சிறப்பான வகுப்பறை முகாமைத்துவம் ஒன்றை ஆசிரியர் அமைத்துக்கொள்வதன் முக்கியத்துவங்களை எடுத்துக்கூறி, வினைத்திறனான கற்பித்தலில் வகுப்பறை முகாமைத்துவத்தின் பங்குபற்றி எடுத்துரைக்க.

(10 புள்ளிகள்)

(ஆ) வகுப்பறைக் கற்றலை இலகுபடுத்தும் முறைகளில்,

(i) பௌதிக சூழல்

(ii) உளவியல் சூழல்

(iv) சமூக சூழல்

ஆகியவற்றின் முக்கியத்துவங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

04.(அ) "சிறந்த வகுப்பறை முகாமைத்துவம் வினைத்திறனான ஆசிரியர்களை உருவாக்கும்." இடைநிலைப்பாடசாலைகளில் இக்கூற்று தற்போது எந்தளவிற்கு நியாயப்படுத்தக்கூடியதாக இருக்கின்றதென்பதை விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) சிறந்த வகுப்பறை முகாமைத்துவ உத்திகளை எடுத்துக்கூறி, இதில் நேரம் தவறாமை ஆசிரியர்களை சிறந்தவொரு வாண்மை விருத்திக்கு இட்டுச்செல்லும் என்னும் கருத்துக்கான ஆதாரங்களை முன்வைக்க.

(08 புள்ளிகள்)

05.(அ) சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் செயற்றிட்ட முறை (Proje Method) கற்பித்தலில் முக்கியமான படிகளை விளக்கி இக்கற்பித்தல் முறையின்போது கருத்திலெடுக்கப்பட வேண்டி முக்கிய அம்சங்களை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) மாணவர்களுக்கு ஏதாவது ஒரு பிரச்சினையை முன்வைத்து அவற்றை அவர்களே தீர்த்துக்கொள்வதற்கான வாய்ப்புக்களையு வழிகாட்டல்களையும் வழங்குவதே பிரச்சினையைத் தீர்த்த கற்பித்தல் முறையாகும். (Problems Solving Mehtod) தரம் 1 இற்கு இவ்வாறான கற்பித்தல் முறையொன்றை முன்னெடுக் வேண்டியிருப்பின் நீர் எடுக்க வேண்டிய செயற்பாடுகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

06.(அ) "சிந்தனையைக் கிளறல் கற்பித்தல் முறை." என்பதை விளக் இதன்மூலம் கிடைக்கப்பெறும் அனுகூலங்களை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) "சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் கலந்துரையாடல் கற்பித்த முறைமூலம் சிறந்த பயனைப் பெறலாம்." இக்கூற்று எந்தள வினைத்திறனுடையதென்பதை ஆராய்க.

(10 புள்ளிகள்)

07.(அ) இடைநிலைப்பாடசாலை மாணவர்களின் அளவு சார்ந்த வெளியீட்டை அளவிடுவதில் கட்டுரைவகை வினாக்களைவிட அமைப்புக்கட்டுரை வினாக்கள் அதிக பயனுறுதிவாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இக்கருத்தினை விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) நியமச் சோதனை முறைமூலம் கிடைக்கப்பெறும் மாணவர்களின் அளவீடு உண்மையில் எந்தளவு வினைத்திறனுடையது என்பதை ஆராய்க.

(08 புள்ளிகள்)

08.(அ) வினாக்களைத் தயாரிப்பதில் புளூமின் பகுப்புமுறை எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றதென்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) "மாணவர்களை அளவிடுவதற்காக பயன்படுத்தப்படும் வினாக்கள் அதிகமாக அறிவினை மட்டுமே அளவிடுவதாக பலராலும் கூறப்படுகின்றது. இக்கூற்றின் உண்மைத்தன்மையினை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

********

Eastern University 30 NOV 2012